# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

## மாநில அளவிலான மினிமாரத்தான் போட்டி

மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான மினிமாரத்தான் போட்டி திருச்செந்தூர் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் உடற்கல்வி கல்லூரியில் 24.09.2016 அன்று காலை 6.15 மணியளவில் நடைபெற்றது. இதில் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியிலிருந்து 8 மாணவிகள் பங்கேற்றனர்.

இப்போட்டியில் எமது கல்லூரியைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு தமிழ்த்துறை மாணவி D. செல்வமணி 6 கிலோமீட்டர் தொலைதூர ஓட்டத்தை 27 நிமிடங்களில் கடந்து ஆறாவது இடத்தையும், மூன்றாம் ஆண்டு கணிதவியல் துறை மாணவி P. முத்துரமா 6 கிலோமீட்டர் ஓட்டத்தை 28 நிமிடங்களில் 8வது இடத்தையும் பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். போட்டியில் கலந்து கொண்ட மாணவிகளையும் பயிற்சி அளித்த உடற்கல்வி இயக்குநர் திருமதி R. அனிஷ்டா M.P.Ed., M.Phil., SET., அவர்களையும் கல்லூரியின் முதல்வர், இயக்குநர், மற்றும் நிர்வாகத்தினர்கள் பாராட்டினர்.